## சிலிண்டர் தட்டுப்பாடு: ஒன்றிய அரசையும் அதற்குத் துணைபோகும் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

# தமிழ்நாடு முழுவதும் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நடைபெறுகிறது!

**சென்னை, மார்ச் 15 -**

**தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை; அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை! தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் NDAஅரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் இன்று (15.3.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணிக்கு மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது!**

இது தொடர்பான அறிவிப்பு வருமாறு :-

ஒன்றிய பா.ஜ.க. NDA அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையினாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காதன் விளைவாகவும் இன்று நாடு முழுவதும் சமையல் கேஸ் சிலிண்டருக்கும் - வணிக ரீதியிலான கேஸ் சிலிண்டருக்கும் தட்டுபாடு ஏற்பட்டு மக்கள் அவதியுற்று வருகின்றனர்.

உணவகங்கள், வணிக நிறுவனங்கள் சரிவர இயங்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. சிறுகுறு தொழில்கள் உள்ள அதிக தொழில்வளமிக்க தமிழ்நாடு இந்த கடுமையான பாதிப்பை சந்திக்கும் என்பதால் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து நிலைமையை சரிசெய்ய வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் வாயிலாக வலியுறுத்தி இருந்தார். ஆனால் தற்போது வரை மக்களிடையே நிலவும் அச்சத்தைப் போக்கி நிலைமையை சீராக்க முறையான நடவடிக்கை எடுக்கவில்லை ஒன்றிய NDA அரசு. நாடாளுமன்றத்தில் இதைப்பற்றி பேசவே பிரதமர் மறுத்து வருவது கண்டனத்திற்குரியது.

அதோடு தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி, நூறு நாள் வேலை திட்ட நிதி, குடிநீர் இணைப்பு நிதி என எந்த நிதியையும் ஒதுக்காமல் நிறுத்தி வைத்திருப்பது. கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம், ஒசூர் விமான நிலையம் என எந்தவொரு வளர்ச்சித் திட்டத்திற்கும் அனுமதி தராமல் முட்டுக்கட்டை போட்டு வருவது. மும்மொழி திணிப்பு என்ற பெயரில் தமிழ்மொழியை அழிக்க துடிப்பது, கீழடி அகழ்வாய்வு முடிவுகளை ஏற்க மறுப்பது என தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

இப்படி தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து இன்று (மார்ச் 15ஆம் தேதி - ஞாயிற்றுக்கிழமை), காலை 10.30 மணியளவில், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் 'மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி' சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த அனைத்து அமைப்புகளின் நிர்வாகிகள் அனைவரும் மற்றும் பொதுமக்கள் பங்கேற்கின்ற வகையில், மாவட்ட கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் NDA அரசுக்கு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் - அமைச்சர்கள் பங்கேற்கும் இடங்கள்!

**தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை. தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் இன்று (15.03.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணிக்கு மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது.**

**ஆர்ப்பாட்டத்தில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் இடங்கள்**

| இடம் | பெயர் |
|---|---|
| தஞ்சாவூர் | – மானமிகு ஆசிரியர் கி. வீரமணி (திராவிடர் கழகம்) |
| சென்னை கிழக்கு | – திரு. கு.செல்வபெருந்தகை (காங்கிரஸ்) |
| மதுரை | – திரு. வைகோ (ம.தி.மு.க) |
| காஞ்சிபுரம் | – திரு. பெ.சண்முகம் (சி.பி.எம்.) |
| பெரம்பூர் – சென்னை வடக்கு | – திரு. மு.வீரபாண்டியன் (சி.பி.ஐ.) |
| சென்னை மேற்கு | – திரு. அபுபக்கர் (இ.யூ.மு.லீக்) |
| சென்னை தெற்கு | – திரு. தொல்.திருமாவளவன் (வி.சி.க) |
| சென்னை தென்மேற்கு | – திரு. அருணாசலம் (ம.நீ.ம) |
| சென்னை மேற்கு | – திரு. எம்.எச்.ஜவாஹிருல்லா (ம.ம.க) |
| கோவை | – திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் (கொ.ம.தே.க.) |
| சென்னை மேற்கு | – திரு. எல்.கே.சுதீஷ் (தே.மு.தி.க) |
| சென்னை தெற்கு | – திரு. தி.வேல்முருகன் (த.வா.க) |
| சிதம்பரம் | – திரு. ஜி.எம்.ஸ்ரீதர் வாண்டையார் (மூ.மு.க.) |
| சென்னை மேற்கு | – திரு. தமிமூன் அன்சாரி (ம.ஜ.க.) |
| திருப்பூர் | – திரு. உ. தனியரசு (கொ.இ.பே.) |
| சென்னை வடகிழக்கு – திருவொற்றியூர் | – திரு. முபாரக் (எஸ்.டி.பி.ஐ.) |
| விருதுநகர் | – திரு. கருணாஸ் (மு.பு.ப) |
| கரூர் | – திரு. ஜக்கையன் (ஆதித்தமிழர் கட்சி) |
| கோவை | – திரு. நாகை திருவள்ளுவன் (தமிழ்புலிகள் கட்சி) |
| திருச்செங்கோடு | – திரு. அதியமான் (ஆதித் தமிழர் பேரவை) |
| திருச்சி | – திரு. கே.கே.செல்வகுமார் (தமிழர் தேசம் கட்சி) |
| ஈரோடு | – திரு. கே.எஸ்.ராஜ்குமார் (புதிய திராவிட கழகம்) |
| கோவை | – திரு. வெண்மணி (திராவிடர் தமிழர் பேரவை) |

### மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் இடங்கள்!

| இடம் | பெயர் |
|---|---|
| திருச்சி | – முதன்மைச் செயலாளர் **மாண்புமிகு கே.என்.நேரு** |
| திண்டுக்கல் | – துணைப் பொதுச்செயலாளர் **மாண்புமிகு ஐ.பெரியசாமி** |
| திருவண்ணாமலை | – **மாண்புமிகு எ.வ.வேலு** |
| கடலூர் | – **மாண்புமிகு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** |
| சாத்தூர் | – **மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்** |
| விருதுநகர் | – **மாண்புமிகு தங்கம் தென்னரசு** |
| புதுக்கோட்டை | – **மாண்புமிகு எஸ்.ரகுபதி** |
| ஈரோடு | – **மாண்புமிகு சு.முத்துசாமி.** |
| சிவகங்கை | – **மாண்புமிகு கே.ஆர்.பெரியகருப்பன்** |
| செங்கல்பட்டு | – **மாண்புமிகு தா.மோ.அன்பரசன்** |
| திருப்பூர் | – **மாண்புமிகு மு.பெ.சாமிநாதன்** |
| தூத்துக்குடி | – **மாண்புமிகு கீதாஜீவன்** |
| திருச்செந்தூர் | – **மாண்புமிகு அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்** |
| இராமநாதபுரம் | – **மாண்புமிகு ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்** |

| இடம் | பெயர் |
|---|---|
| சேலம் | – **மாண்புமிகு இரா.இராஜேந்திரன்** |
| ஒட்டன்சத்திரம் | – **மாண்புமிகு அர.சக்கரபாணி** |
| இராணிப்பேட்டை | – **மாண்புமிகு ஆர்.காந்தி** |
| சென்னை தெற்கு | – **மாண்புமிகு மா.சுப்பிரமணியன்** |
| மதுரை | – **மாண்புமிகு பி.மூர்த்தி** |
| அரியலூர் | – **மாண்புமிகு எஸ்.எஸ்.சிவசங்கர்** |
| சென்னை கிழக்கு | – **மாண்புமிகு பி.கே.சேகர்பாபு** |
| கும்பகோணம் | – **மாண்புமிகு கோவி.செழியன்** |
| மதுரை மத்திய | – **மாண்புமிகு பழனிவேல் தியாகராஜன்** |
| திருவள்ளூர் | – **மாண்புமிகு சா.மு.நாசர்** |
| பொன்மலை, திருச்சி | – **மாண்புமிகு அன்பில் மகேஷ் பொய்யாமொழி** |
| அறந்தாங்கி | – **மாண்புமிகு சிவ.வீ. மெய்யநாதன்** |
| விருத்தாசலம் | – **மாண்புமிகு சி.வெ.கணேசன்** |
| திருவாரூர் | – **மாண்புமிகு டி.ஆர்.பி.ராஜா** |
| நாமக்கல் | – **மாண்புமிகு மா.மதிவேந்தன்** |
| கன்னியாகுமரி | – **மாண்புமிகு த.மனோ தங்கராஜ்** |
| தாராபுரம் | – **மாண்புமிகு என்.கயல்விழி செல்வராஜ்** |



## எல்லார்க்கும் எல்லாம் என்பதே திராவிட மாடல்!